உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# அத்தொய்த சாஸ்திர மான்மிய சங்கிரகம்.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னும்-கோயிலூர்

ஸ்ரீ - முத்துராமலிங்கசுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

பரிசோதித்து

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—:o:—

1886.

விய௵ ஆடி௴.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# அத்வைதசாஸ்திர மான்மிய சங்கிரகம்.

ஸ்ரீ-சற்சின்மயமாக விளங்காநின்ற ஏ! சுவாமின் அத்வைத சாஸ்திர சிரவணாதி மகிமைகளை அடியேற்கனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று சீடனானவன் விண்ணப்பஞ்செய்ய அதற்கு ஆசாரியர் அனுக்கிரகம் பண்ணினார் அவைதை ஈண்டு எடுத்துக் கூறுகின்றோம்.

அத்வைத சாஸ்திரங்களில் மகாமகிமைகள் இருக்கின்றன. அவை என்னை எனின் அவ்அத்வைத சாஸ்திரங்கள் சகல பிராந்திகளையுஞ் சூனியம்பண்ணுகிறதாகியும் ஜநநமரணமென்கிற சம்சாரசாகரத்தைத் தாண்டுகிறதற்குத் தெப்பமாகியும், ஸ்வகர்மகுண சாலமென்கிற மேகங்களைப் போக்கடிக்கிற பிரசண்டவாயுவாகியும், ஆதியாத்மீக மாதிபவுதீக மாதிதெய்வீகமென்கிற தாபத்திரயாக்கினிகளைச் சாந்திபண்ணுகிற அமிர்தவருஷமாகியும், புத்திர மித்திர களத்திர பசுப் பிறத்தியக்கிரகக் கிராமக்ஷேத்ர தனதானியாதிகளிடத்திற் பிரியமோதப் பிரமோதமாயிருக்கின்ற வஞ்ஞானமான மோகாந்தகாரத்தைப் போக்கடிக்கிற சூரியப்பிரகாசமாகியும், ஞானத்திரய, சங்கீத்திரய, பந்துத்திரய, ஜீவத்திரய, ஜகத்திரய, விந்துத்திரய, தெய்வத்திரய, ஈஷணாத்திரய, கர்மத்திரய, காரணத்திரய, வாசனாத்ரயமான விவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சி

ராயுதமாகியும் இதரமான சப்தமீமாம்ச மந்திர கர்ம யோக நியாய மிவைமுதலான சாத்திரங்கள் படித்துஞ் சுகதுக்க மோக காமபந்த ஜநநமரணங்களை நிரசனம் பண்ணமாட்டா மற் சமுசயங்களோடு கூடி யநேகமயக்கங்களினால் மோக்ஷமாகிற கரையைக்காணமலுமிருக்கிறபோர்கள்கூட தெய்வாதீனமாய் அத்தொய்த சாத்திரசிரவணம் பண்ணினா லதுசகல சமுசயங்களையுஞ் சகல பயதுக்க மோகாதிகளையுந்தள்ளி மோக்ஷகதியைக்காண்பிக்கிறதாயிருக்கிறபடியினாலு மிந்த அத்தொய்த சாத்திரங்களின்பேரில் மிகவும் விசுவாசம் பண்ணவேண்டியது சித்தமென்று ஸ்ரீ-க்ஷேசாஸ்திரிசிவனார் திருவாய் மலர்ந்தருளிய சத்சப்பிரகரணத்திலும்.

குரு சந்நிதானத்திலே அத்தொய்தசாஸ்திர சிரவணமாத்திரம் பண்ணினதுகொண்டு எழுபத்தொரு சதுர்யுகம் ஆநந்தபோகம் புசிக்கிற சுவர்க்கமுண்டென்கிற சாஸ்திரமே உனக்குப் போதுமென்று ஸ்ரீ-வித்தியாரண்ணியசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பஞ்சதசப்பிரகரணத்திலும்.

திகழுநான்முகன் முதற்றேவர் மூவருஞ்
சகலவேதங்களுஞ் சாத்திரங்களும்
புகலுஞானத்தினற் புரணமானது
நிகரில்வாசிட்டமா நிபுண ஞானநூல்.

அன்றியும்.

தலைமைநான்முகன் மனத்தாமரைக்கினன்
சிலையில்ராகவன் றிருச்செவிக்குத்தெள்ளமு
துலைவில்வான்மீகிவாக் குதித்ததத்துவ
நிலைமைவாசிட்டமா நிபுணஞானநூல்.

அன்றியும்.

பெரியவரறிவுறு பெருமைசான்றது
விரிவுறுசிறியவர் மேவொணாதது
வரிசையிலுயர்ந்தது வசிட்டசங்கதை
யரியமெய்ஞ்ஞானநூ லனைத்தின்மிக்கதே.

அன்றியும்.

தெருளுருமகற்கிதஞ் செய்யுமன்பிலு
லருமைவாசிட்டநூற் கன்னையொப்பளோ
வுரியதாய்பிறவியை யுள்ளதாக்குவள்
பெருமைவாசிட்ட மிப்பிறப்பைமாற்றுமே.

அன்றியும்.

சாத்திரத்திற் பெரியதிது நடங்காவியத்திற் பெரியதிது, மாத்திரத்தின் மெய்ஞ்ஞான வழியாற்பெரியதிது ஞான, நே த்திரத்திற் பெரியோர்க்கு நிதிபோற்பெரியதிது கதிரோன், கோத்திரப்பொற் பாத்திரத்திற் குதித்தவமுதாம் வாசிட்டம்.

அன்றியும்.

பரமமேனிவசிட்டமுனி பச்சைமேனியிராமற்குப்
பிரமஞானமுணர்வித்த பெருவாசிட்டன்னூலைத்
திரமதாகக்கற்பளவே சீவன்முத்திப்பதஞ்சேர்வ
ருரமதாக வுள்ளுணர்வோருருபே றெனமனுரைப்பதுவே.

அன்றியும்.

வாசிட்ட மென்றளவில் வாழ்வுதரும் வாசித்தா
னேசித்த தெல்லாம் நிரம்புமே - யோசித்து
அர்த்தமுணரி லருட்படு மங்கந்நிலையிற்
சித்தநிற்கின் முத்தியுமாந் தேர்.

என்று ஸ்ரீ வசிஷ்டமகாமுனீச்சுரராற்றிருவாய்மலர்ந்தருளிய
ஞானவாசிட்டத்திலும்.

மூவர்தேடிறை சனற்குமாரன் முதன்முனிவர்கட்கு மொழிகீதையிங், கியாவரோதினரிதன் பொருட்டுணி வரியாவர் கேட்பவரியாவர்தம், பாவம்வேரொடு பறிந்தநல்ல பரமப்பதம் பெறுவராதலான், மேவுமன்பினொடு மோதமீளுதலில் வீடுவேண்டினன் விரும்புவான்.

என்று ஸ்ரீ செகதீசுரராற் றிருவாய்மலர்ந்தருளிய
ஈசுரகீதையிலும்.

ரு
ஏயவிவோம் பேசியவிவ்வறநூலினையே யெடுத்துரை
ஞயஞானயாகத்தா லெனையேயா ராதிக்கின்முன் [ப்பா
மேயபொருமை தனைவிட்டு விருப்பாலிதனைக் கேட்பானுந்
தீயவினைகளற விட்டுத் தேவருலகஞ் சேருமால்.

என்று ஸ்ரீ கிஷ்ணபகவானாற்றிருவாய்மலர்ந்தருளிய
பகவற்கீதையிலும்.

பரமமா மிந்தக்கீதை படிப்பவன் பாரின்மீதே
திருவினன் முகுந்தனெக்குந் தேசினாலிரவி யொக்கு
மருவுமா மெனையேவந்து மாசிலா விஞ்சையாகு
முருவமா முமையுமென்று மவனுளத் துறையாநிற்கும்.

என்று ஸ்ரீ பிரமதேவராற் றிருவாய்மலர்ந்தருளிய
பிரமகீதையிலும்.

இங்நிலந்தனிற் கைவல்ய நவநீதமெனப் பேரிட்டு
நன்னிலமருவு நாராயணன் சொன்ன ஞானநூலைப்
பன்னியாராய்ந்து பார்ப்போர் பரமார்த்த சொரூபமாகி
அன்னியவனர்த்தம் பொய்யா யானந்தமெய்யாய் வாழ்வார்.

அன்றியும்.

குலவுசற் குருவின்பாதக் குளிர்புன றலைமேற்கொண்டால்
உலகினிற் றீர்த்தமெல்லா முற்றபேறடைவார்போல
நலமையாகுங் கைவல்ய நவநீத நூலைக்கற்றோர்
பலகலை ஞானநூல்கள் படித்தஞானிகளாய் வாழ்வார்.

என்று ஸ்ரீ தாண்டவராய சுவாமிகளாற்
திருவாய்மலர்ந்தருளிய கைவல்ய நவநீதத்திலும்.

வேதமுதலாகிய நூலனைத்தினுஞ் சொல்பொருளை விளங்கியிடக் கரதலாமலகமெனக் காட்டிப், போதமயமாகிய பேரானந்தத்தழுத்தும் பொருவிகந்த விந்நூலை முத்திபெறற்குரிய, சாதனநான்கினையு மடைந்தெவ ராநுமென்றுந் தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி, யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு மன்புடையோர்தமைக்காணி னளித்திடுகவுவந்தே.

என்று ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகளாற் திருவாய்மலர்ந்தருளிய
வேதாந்த சூடாமணியிலும்.

தரணிபுகழ் தத்துவனூர் தாமுரைத்த ஞானப்
பரணிதனைக் கட்டவிழ்த்துப் பார்த்தாற் - கரணமுடன்
சேர்ந்து மணவாத சிவமணமே பூரித்த
சாந்தமண நாறுமே தான்.

என்று ஸ்ரீ தத்துவராயசுவாமிகளாற் திருவாய்மலர்ந்தருளிய
அஞ்ஞவதைப்பரணியிலும்.

பருவசாரத்தாற் பலிக்கு மநுபூதிச்
சொரூப சாரத்தின் சுவையை - யிருசெவியா

னுண்டிருக்க வல்லா ருலகமெல்லாந் தாமாகக்
கண்டிருக்க வல்லார்கள் காண்.

என்று ஸ்ரீ சொரூபாநுபவராற்றிருவாய்மலர்ந்தருளிய
சொரூபசாரத்திலும்.

ஓதியவிந் நூலிலுள கவிதையின்க ணுற்றவொரு பாதத்துக் கிணையொன்றில்லை, மீதியுள பாதங்கட் கிணையேயாக மேவுபொரு ளெவையேனு மெங்குமுண்டோ, வீதலுரு வகண்டபர ஞானந்தன்னை விளக்கியிடும் வாக்குக்கின் கிணையேதாகு, மாதலினு லதிசயமா மிந்நூலை யத்யந்த மாதரவோடப்யாசிப்பாய்.

அன்றியும்.

பலகோடி யாகத்தைப் பாங்காய்ச்செய்தும் பலகோடி தீர்த்தத்திற் றனஞ்செய்து, மூலவோடு பெற்றபல மிதனினுள்ள வொருபாதம் படித்தபலத் திணையேயாகா, நிலமேவு மிந்நூலின் கவியின்கண்ணே நிருமலமாய் நிகழ்கின்ற விரண்டுபாதஞ், சலியாது படித்தபலன் றனக்கீடாகச் சகலபுவி தானபலஞ் சாற்றலாமோ.

அன்றியும்.

அரிதான விந்நூலின் கவியின்கண்ணே யதிசயமா யமைவுற்ற மூன்றுபாதஞ், சரியாகப் படித்துவரும் பலந்தனக்குச் சகலவித தானமுமே சமானமாகா, பரிவாக விதனிலுள கவிதையொன்றைப் படித்தபலன் றனக்கிணையா யெவையுமில்லை யொருகால மேனுமித னநுபவத்தை யுற்றதனுற் பெறும்பேறுக்குவமையுண்டோ.

அன்றியும்.

இந்நூலே பரப்பிரம மிதனைத்தானே யினிமையுடனெப்போது மப்யாசிப்பாய், பன்னூலைப் படித்ததனுற் பெறும்

பேறென்ன பானுவின்மு ன்பலவொளியாற் பலனுமுண்டோ, செந்நூலி தொன்றினையே செம்மையாகச் சிரத்தையுடன் சந்ததமு மப்யாசிக்கி, லெந்நூலின் பலன்களுமீ தொன்றி னாலே யெய்தியிடு மிதிலிறையு மையமில்லை.

அன்றியும்.

இந்நூலா லத்யாச மனைத்துநீங்கு மிந்நூலா லாவரண மனைத்துநீங்கு, மிந்நூலாற் சின்மாத்ர நிட்டைகூடு மிந்நூலாற் சித்தவிசி ராந்தியெய்து, மிந்நூலா லகண்டபர ஞான முண்டா மிந்நூலா லஞ்ஞான மனைத்துநீங்கு, மிந்நூலா லனாதிபவ பந்தந்தீரு மிந்நூலா லகண்டபர மோட்சமெய் தும்.

அன்றியும்.

இந்நூலா லித்துவித மனைத்துநீங்கு மிந்நூலா லத்துவித மொன்றேதோன்று, மிந்நூலா லிதயமுடிச் சிறப்பதாகு மிந்நூலாற் சீவத்வ நசிப்பதாகு, மிந்நூலாற் பவதுக்க மனைத்துந் தீரு மிந்நூலாற் பரமான சுகமேசாரு, மிந்நூலாற் பாசமெலா நசிப்பதாகு மிந்நூலாற் பரமபதங் கிடைப்பதாமே.

அன்றியும்.

மருவியதன் சென்மத்தி லொருகாலேனு மற்றிதனைக் கேட்போனு முத்தனாவன், சரிவரவே நிதமிதனைப் படிப்போனுக்குச் சமமாகச் சகந்தனிலே யாருமில்லை, யரியவனே யாதலினா லநந்தநூலி லாதரவே செய்யாம லனைத்துந்தள்ளி. நிருமலமா மிந்நூலே முமுட்சுவெல்லா நிதந்தவிரா தப்யாசஞ் செய்யவேண்டும்.

அன்றியும்.

பலசெனனத் தநுட்டித்த வறங்களெல்லாம் பக்குவமாய்ப் பாவங்க ளனைத்துநீங்கி, யிலகியதன் சொரூபநிலை யிசையத்தக்க வினிப்பிறவா முடிவான சென்மத்திற்ருன், சலனமெலா மறநீக்கி யகண்டமாக்குஞ் சத்தியுள விந்நூலைச் சாரலாகு, மலினமுரு விந்நூலைச் சார்ந்தோருக்கு மறுபிறவி யென்றுமிலை மகேசனாணை.

என்று ஸ்ரீ ரிபுமுனிவராற் றிருவாய்மலர்ந்தருளிய
ரிபுகீதையிலும்.

ஸ்ரீ - வசிஷ்ட மகாமுனீச்சுரர்க்கும் ஸ்ரீ - விசுவாமித்திர முனீச்சுரர்க்கும் முன்போர்காலத்தில் ஓர்சம்வாதம் உண்டாயின. அவையாவன, நான் பிரமரிஷியானேனென்று நீர்சொல்லவேண்டுமென்று ஸ்ரீ-விசுவாமித்திரரிஷி ஸ்ரீ-வசிஷ்ட மகாமுனீச்சுரனைப்பார்த்து வினவியதற்கு அவ்வசிஷ்ட மகாமுனீச்சுரர் அவ்விசுவாமித்திர முனீச்சுரனைப்பார்த்து நீர் இராஜரிஷியே யல்லாமல் பிரமரிஷியல்லவென்றனர். அதன்பின்னர் அவ்விருமுனிவர்க்கும் சொற்ப மனஸ்தாபம் பிரமரிஷி அல்ல ஆமென்றதைக்குறித் துண்டாயின பின்பதைக் குறித்து ஸ்ரீ - விசுவாமித்திர முனீச்சுரர் சிவபெருமானிடத்திற் றெரிவிக்க அச்சிவபெருமான் இவர தபிப்பிராயத்தை யகற் றெரிந்துகொண்டு அவ்விசுவாமித்திர முனீச்சுரனை நோக்கி உன தபிப்பிராயம் நிறைவேறுதற்கு ஆதித்தன் ஆதிசேடன் முதலியபெயரை மத்தியஸ்தாளாய் நியமித்து முற்றுப்பெறச் செய்துகொள்ளென்று ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே ஆகட்டுமென்று அச்சிவபெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவ்வண்ணமே செய்தற்கு யத்தனித்துச் சில

மத்தியஸ்தானை அழைப்பிக்க அவர்களில் சிற்சிலபெயர்கள் வந்து ஓரிடத்திற் சேர்ந்திருந்தனர் அச்சபையிலுள்ளோர் களைநோக்கி விசுவாமித்திரர் தமது அபிப்பிராயத்தைத் தெரி விக்க அச்சபையிலுள்ளோர்கள் ஸ்ரீ விசுவாமித்திரனைநோக்கி நீங்கள் ஆதிசேடனையும் ஆதித்தனையும் அழைத்து வாருங் கோள் அதற்குமேல் உங்களிருவர் மனவருத்தத்திற் கேது வான யிப்பொழுது சொல்லியநியாயம் வெளியாமென்றனர் அதற்குமேல் விசுவாமித்திரர் ஆதித்தியரிடத்திற்சென்றனர். அவரிவற்கு மரியாதைசெய்து சுவாமிகள் யாதுகாரணம் இவ டத்துக்கு யெழுந்தருளியதென்று பிரார்த்திக்க விசுவா மித்திரர் சொல்லியசேதி எமக்கும் வசிட்டர்க்கும் யாம் பிரமரிஷி அல்ல ஆம் என்றதைப்பற்றிச் சிவபெருமானிடத்தி லறிவிக்க அதற்கு அச்சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் எல்லோரிடத்தும் அறிவித்தேம் அவர்களனைவரும் ஓரிடத்திற்கூடி யிருக்கின்றனர்கள் ஆகையால் நீரும் வரவே ண்டுமென்று சொல்ல அதற்குச் சூரியர் சொல்லிய சேதி தேவரீ ரபிப்பிராயப்படி யான்வருகிறதி லியாதொரு தடையு மில்லை யான் ஈசுரநியமப்படி ஒரு க்ஷணநேரங்கூடத் தாமசி யாமல் மேருவைச்சுற்றி உலகத்தைப் பிரகாசிப்பித்துக்கொண் டுயிருக்கின்றமையால் அடியேற்கு பதிலாக ஒருவனைத்தாங் கள் நியமித்துவிட்டால் அடியேன் இதோவருகிறேனென்று சொல்ல அவ்வார்த்தையைக் கேட்ட ஸ்ரீ - விசுவாமித்திரர் தமதுதவசை கொஞ்சங்கொஞ்சமாகப் பங்குசெய்துகொடுத் தும் ஆகாமல் பின்முற்றுங்கொடுத்தோ மென்றுகொடுத்தும் சூரியருக்குபதிலாக ஒருவனை நியமிக்கக் கூடாமையால் தாம்

தாமே அவமரியாதையோடு மடம்விட்டு நீங்கினர் பின் ஆதிசேடரிடத்திலாவது போய் அவரை அழைத்துக்கொண்டு போவோமென்றுன்னி அவரிடத்திற்குப்போய் அங்கேயுஞ் சாத்தியப்படாமல் அவ்வண்ணமே அவமரியாதையோடுந் திரும்பி யச்சபையாரிடத்துக்கு வந்து சேர்ந்தனர் அக்குறிப்பை அறிந்து அச்சபையார் ஸ்ரீ-விஸ்வாமித்திர முனீச்சுரரைப்பார்த்து ஏன் அவர்களை அழைத்து வரவில்லையென்று கேட்க அதற்கு அவர் யாதொன்றுங் கூறுமொழிந்தனர் அதன்பின்னர் அக்குறிப்பையறிந்து ஸ்ரீ-வசிட்டமகா முனீச்சுரரை நோக்கித் தேவரீர் சென்று அவர்களை அழைத்து வாருங்கோளென்று அச்சபையார் மொழிந்தனர். அதைக்கேட்ட வசிஷ்டமகா முனீச்சுரர் அவர்களபிப்பிராயப்படி சூரியரிடத்தில் முன்னர் சென்றனர் அவர் மரியாதை பண்ணித் தேவரீரியாதுகாரணம் இங்கெழுந்தருளியது எனக்கேட்க அதற்கு ஸ்ரீ-வசிஷ்டமகா முனீச்சுரர் சொல்லியசேதி முன்னர் ஸ்ரீ - விஸ்வாமித்திரர் கண்டு வந்துசென்றசங்கதி என்று மொழிந்தனர் அதைக்கேட்ட சூரியர் முன் ஸ்ரீ-விஸ்வாமித்திர முனிவரிடத்திலறிவித்த பிரகாரம் மிவ்வசிஷ்டமகா முனீச்சுரரிடத்திலு மறிவிக்க அதைக்கேட்ட ஸ்ரீ - வசிஷ்டமகாமுனீச்சுரர் நல்லது உமக்கு பதிலாக ஒருவரைநியமிக்கிறோம் அஃது எப்படி என்றால் முன் பொருகாலத்தில் யாம் ஜநகர் ஜநக்குமாரர் ஜநந்தனர் ஜநாதனர் என்னும் மகாரிஷிகளோடு ஒருமுகூர்த்தகாலம்அத்தொய்தசாஸ்திர விசாரணையாகிய காலக்ஷேபம்பண்ணி இருக்குறோம் அதில் நாலில் ஒரு பாகத்துக்குரிய பலத்தைக்கொடுத்தோமென்றனர் அப்படிச் சொல்லினவுடனே சூரியருக்கு பதிலாக ஒருவர்நியமமாயிற்று அதுகண்டு சூரியர் மனமகிழ்ச்

கியோடு ஸ்ரீவசிஷ்டமகா முனீச்சுரரைப் பார்த்துச் சுவாமி இதோ அடியேன் வருகிறேனென்று எழுந்தனர் அதன்பின்னர் ஸ்ரீவசிஷ்டமகாமுனீச்சுரர் இச்சூரியனையும் அழைப்பித்துக் கொண்டு ஆதிசேடரிடத்திற்போயினர் அவர் இவ்வசிஷ்ட மகாமுனீச்சுரர்க்கு மரியாதைபண்ணித்தேவரீர் எழுந்தருளிய காரணம் யாதென்று கேட்க அதற்கு வசிஷ்டமகாமுனீச்சுரர் சூரியரிடத்திற்சொல்லியபடி இவரிடத்திலுஞ்சொல்லி இவரு க்குப்பதிலாக ஒருவனை நியமம்பண்ணி வைத்துவிட்டிவரையு மழைப்பித்துக்கொண்டு மேற்கண்டசபையாரிடம்வந்து சேர்ந் தனர். இதுகாரியங்களை அச்சபையிலுள்ளோரனைவரும் அறிந் துகொண்டு ஸ்ரீ-விசுவாமித்திரமுனீச்சுரரைநோக்கி இப்பொழு துங்கள் நியாயம் வெளியாயிற்றுவென்றனர் அதைக்கேட்டு ஸ்ரீ-விசுவாமித்திரர் சபையிலுள்ளோரைப்பார்த்து நீங்கள் சொல்லியகாரியஞ்சரி ஆனாலும் இந்த வசிஷ்டமகாமுனீச்சுரர் வாக்கினால் நம்மைப் பிரம்மரிஷியென்று சொல்லும்படி நீங்க ளனைவோருஞ் சொல்லுங்களென்று சொல்ல அதைக்கேட்ட அச்சபையிலுள்ளோரனைவோரும் ஸ்ரீ-வசிஷ்டமகாமுனீச்சுர ரைநோக்கித் தேவரீர் வாக்கினால் அவ்விசுவாமித்திர முனீச்சு ரரை பிரம்மரிஷியென்று சொல்லவேண்டுமென்று மொழிந் தனர். அதைக்கேட்ட ஸ்ரீ-வசிஷ்டமகாமுனீச்சுரர் அச்சபையா ரைப்பார்த்து ஆனாற் பிரம்மரிஷியென்று மொழிந்தனர் அதன் பின்னர் அவ்விடத்தினின்று தந்தம்மிடத்திற் கனைவோரும் சென்றனரொன்றுஆன்றோர்வழங்கிவருகின்ற ஆச்சரியசரித்திர வழக்கத்திலும்.

பூப்பிரதட்சணமாகச்சென்று காசிக்ஷேத்திரத்தைஅடை ந்தவுடனே அவ்வவ் வருணாச்சிரமத்திற்குத் தக்கதாகச் சுரு

தியில் விதித்துள்ள பிரகாரம் கோதானம்பூதானம் முதலிய அநேக தானங்களுஞ்செய்து பின் கங்கைக்குப்பூசித்து கங்கையில் ஸ்நானஞ்செய்தால் அன்றையத் தினத்திற்கு மாத்திரம் எண்பது கிருச்சுப்பலனென்றும் அத்தினமொழிந்தபின் எத்துனைநாள் எத்தனைதிங்கள் எத்தனை ஆண்டு இருந்து ஸ்நானஞ்செய்தாலும் அவ்வண்ணமின்றித் தினமொன்றுக்கு அறுபது பொன் களஞ்சிபலனென்றும் இவ்வண்ணங் காசிமான்மியத்திற் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வண்ணங்கூறியபலன் சித்தித்தற்குமுயற்சித்தாலும்யாவர்க்குஞ்சித்திக்கக்காணோம் அன்றி ஒவ்வொருவர் ஏகதேசத்திலிப்பலன் வேண்டினு லவர்களாற் செய்யுஞ்சங்கிரகநியாயம் எவ்வண்ணமென்னில் கங்காஸ்நானபலத்தை யுத்தேசித்தவன் தான் சென்மித்துள்ள தேசத்தினின்று தாம் அருத்தசாஸ்திரத்தி லருத்தத்தை ஈட்டும்படி சொல்லியபிரகாரம் ஈட்டியுள்ள திரவியத்தைகையிற்றாங்கிக்கொண்டு கோபதாபம் ராகத்துவேஷம்முதலிய துர்க்குணங்களைத் தூரத்தள்ளிவிட்டுச் சமை தமைமுதலிய சற்குணங்களையுமுடையவனாகித் தான தருமங்களையுந் தந்தம் மளவிற்குரிய அளவுசெய்ய வேண்டுமென்னுங் கருத்தோடுங்கூடிப் பிரயாணப்பட்டு முன்னர் இராமேச்சுரம்போய் அதினின்று தனிக்கோடியாகிய சேதிவிற்குச்சென்று ஸ்நானஞ்செய்து அவ்விடத்திற் செய்யவேண்டிய நியமங்களை முடித்துக்கொண்டு அதன்பின்னர் ஆண்டுள மிருத்து ஒருமிட்டி எடுத்துக்கொண்டு மீண்டு இராமேச்சுரம் வந்து இராமநாதனையுஞ் சேவித்துக்கொண்டு பின் ஆண்டுளசேதுமாதவரிடத்திற்குவந்து அவரைச் சேவித்துத்தாங்கொண்டுவந்த மிருத்திமிட்டியை அவர்முன்பாகவைத்து அதை மூன்றுபாகஞ்செய்து இரண்டுபாகத்தை அவரிடத்

திலொப்பிவித்துப்போட்டு மூன்றும்பாகத்தை தாம்கைப்பற்றி ச்சொற்பங்கூடத்தவறாது வில்வச்குடுக்கை சிமிழ் சம்படம் முதலியவைகளிலடக்கம்செய்து அவ்விராமேச்சுரத்தினின்று பூப்பிரதட்சணம்மாகப் பிரயாணப்பட்டு மார்க்கங்களினுள்ள கணேச்சுரர் குகேச்சுரர் நடேச்சுரர் சிவன் விஷ்ணு தேவிமுத லிய தெய்வங்களைப்பூசித்தற்கேதுவாகிய யத்தனத்தோடுமுன் னர் ஆண்டாண்டுள நதிகளில் ஸ்நானஞ்செய்து தந்தம் வருணா ச்சிரமத்துக்குரிய தானதரும சிவபூசை பாராயணதோத்திரம் முதலியசெய்துகொண்டுதீவிரமாய்ச்செல்லுங்காலையில் இடை யில் இடையூறுகவுண்டாகும் பனிவெய்யில் காற்று மழை இடி தலைநோய் சுரநோய் வயிற்றுநோய் குடர் நோய் முதலிய நோய்களாலும் துஷ்டமிருகமுதலிய செந்துக்களாலுமுண்டா கும் இடையூர்களுக்குத் தப்பிப் பிழைத்து ஆறுமாசம் ஒரு வருஷத்தில் காசிச்க்ஷேத்திரஞ் சேருவதோ அரிது ஏதோ ஒரு வாறு தெய்வீகத்தினாலவ்விடையூர்களின்றிக்காசிச்க்ஷேத்திரத் தை அடையப்படுமோகில்ஆண்டு அவ்வவ் வருணாச்சிரமத்துக் குரிய கோதானம் பூதானம் சொர்னதானம் வஸ்திரதானம் துலாத்தானம் முதலிய இன்னு மநேகதானங்களைச் செய்து முடித்துக்கொண்டு பின் விசுவேசம் மாதவம் துண்டிம் தண் டபாணிஞ்சம் வயிரவம் வந்தேகாசி குகாங் கெங்காம் பவானி மணிகரணிகாஸ்நானம் என்னுமுச்சாரணத்தோடு சிவபெருமா னாகிய ஸ்ரீவிசுவேசுரனை இருதயத்திற் றியானித்துக்கொண்டு ஒரோ மனதாய் ஸ்நானஞ்செய்தால் அன்றைய தினத்திற்குமாத்தி ரம் இவன் ஆறுமாசம் ஒருவருஷம் வெகுபிரயாசையடைந்து வந்தமையினால் எண்பது கிருச்சுப்பலனுண்டு அன்றி அன்றை யதினமொழிந்து மீண்டு தினந்தோறும் நியமமாக ஸ்நானஞ்

செய்தா லறுபது சொர்னகளஞ்சிபலனுண்டு இதைப்பார்க்கிலும் அத்தொய்த்சாஸ்திர படனஞ்செய்தால் அதிசுலபமாகப் பிரயாசமன்றியிற் பலன் மிக்குற்றுண்டாகின்றன. அஃதெத்தன்மைத் தாகவுண்டாமென்னில் ஒரு புருடனெவன் தானு தயாதியில் நித்திரைவிட்டெழுந்து சரீரசுத்திசெய்து பின்ஸ்நானபானமுதலிய கிரிகையை முடித்துக்கொண்டு போஜனத்துக்குப் போமளவும் அத்தொய்தசாஸ்திர படனஞ் செய்து பின்போஜனத்துக்கு போய்மீண்டுவந்து சொற்ப நேரந் தனக்குமயக்கமாகவிருந்தால் நித்திரை சொற்பநேரஞ் செய் தெழுந்து மீண்டு சரீரசுத்தி செய்துகொண்டு மீண்டு அஸ்தமானபரியந்தம் சிரவணாதி படனஞ்செய்தால் பிரதிதினமும் என்பதுகிருச்சுப் பலனுண்டாம் அவ்வண்ணஞ் செய்தற்கு அசத்தனாயிருப்பவன் ஸ்ரீ-குருதோத்திரஞ்செய்து அத்தொய்த சாஸ்திரங்களைத்தமது கரத்தால் அவிழ்த்து. கண்ணுற் பார்த்துப்பின் அச்சாத்திரங்களைத் தமதுகரத்தாற்கட்டிவைத்துமீண்டு பழையபடிஅத்தோத்திரஞ்செய்தால் அறுவதுபொன்களஞ்சி பலனுண்டாம். அன்றியில் அத்தொய்தசாஸ்திரங்களைப் படனஞ்செய்தற்கு யத்தனித்து ஒருபாடல் அல்லது இரண்டுபாடல் அல்லது நாலுபாடல் அல்லது பத்துப்பாடல் அல்லது இப்படிச் சிலபாடல்கள் படிக்கும்போது அதற்கு இடையூறுகள்ஏதேனும் விவகாரங்கள் நேரிட்டு அவ்வளவோடே அப்படனத்தை நிறுத்திவைத்துக் குருதோத்திரஞ்சொல்லித் தமது கரத்தால் அப்புத்தகத்தைக் கட்டினால் அதற்கு அஞ்சு கிருச்சுப் பலனுண்டாம் அன்றியில் ஒவ்வொருஅத்தொய்த சாஸ்திரங்களை அரைவரிசை முக்கால் வரிசைபடனஞ்செய்து முற்றும் நிறைவேறாது ஏதேனும் இடையூர்கள்

ர்த்து கேட்டு அவ்விடையூருல் ஆரம்பித்த அத்தொய்தசா ஸ்திர படனத்தை நிறுத்திவைத்து அப்புத்தகத்தைத் தமது ரத்தாற் கட்டிக் குருதோத்திரஞ்செய்தா லப்படிநடந்த சிர வணபடனத்துக்கு இருவத்தைந்து கிருச்சப்பலனுண்டாம். அன்றியில் ஒருஅத்தொய்த கிரந்தத்தை ஆசாரியர்சன்னிதா னத்தில் ஒருவர் ஆரம்பித்து ஆதியோடந்தமாய்ச்சிரவண மாத்திரஞ்செய்து முற்றப்பெறுமாகி லவர்கு எழுபத்தொரு சதுர்யுகம் ஆனந்தபோகம் புசிக்கிற சுவர்க்கபலனுண்டா மென் றறைகின்ற அரியநூல்களிலும்.

இப்படி அத்தொய்த சாஸ்திர மகிமைகளை அநேக சாஸ் திரங்களிலு மகாபிரபலமாகப்பிரதிபாதித் திருத்தலினு லியாவ ரும்அத்தொய்தசாஸ்திரமாகிய கிரந்தங்களில் ஆதரஞ்செய்து அச்சிரவண படனஞ் செய்தற்குப் பேராவலுடையராகி அச்சாஸ்திர சிரவண படனத்துவாரா ஜநநமரணமென்கிற பந்தத்தினின்றும் விடுபட்டு மோட்சமென்கிற ... மா கிப்பேரானந்தக் களிப்போடு இருக்கவேண்டியது ...

இவ்வண்ணங் கூறியதை ஆலோசித்துப் ... தில் கங்காஸ்நான முதலியவை அகக்கரண ... ரணத்தாலு மகாகப்பிரயாசையோடு ... யதாகியும் அற்பபலனுடையதாகியும் அறப்ப... பிரத்தியட்சமின்றிச் சரீரார்த்தத்திலடை... தற் கரிய அனந்தங்கோடி சென்மங்களி... தவறாது கருமங்களை இயற்றினாலும் பரகதி... யிருக்கின்றன.

உ

அத்வைதசாஸ்திர படனபலனும் அதிற் பிரதிபாதித்துள்ளபடி அனுஷ்டிக்கும் அனுஷ்டான பலனும் பிரத்தியக்ஷமாகியும் மகத்பலனாகியும் மனமுதலிய முக்கரணத்திற்கும் மகாபிரயாசை யில்லாததாகியும் மகத்தான ஆசைமுதலிய வனர்த்தங்க ளனைத்தையு மத்தியந்தம் வழுவற மாற்றுவதாகியும் மற்றும் அநேக விசேஷமுடையதாகியுமிருக்கின்றன. ஆகையா லதியூக புத்தியுடையோர்கள் மேற்காட்டப்பட்ட தன்மைகளைத் தங்கள் தங்கள் மனோசாட்சியாகவும், ஈசுர சாட்சியாகவும், இவை இவை சிறந்தவை-ஆம்-அல்லவென்பதை யுன்னித்தந்தம் வினைக்கீடாக ஈசுரப்பிரோரணைப்படி முயற்சித்துச் சரீரம் அநித்தியமாகையா லதிசீக்கிரத்தில் நன்மையடைய விருப்பமுள்ளோர்கள் நன்மையை அடைய வேண்டியது சித்தம்.

அத்வைத சாஸ்திர சிரவணமாகிய படனஞ்செய்பவர்களுக்கு அறம், பொரு, ளின்பங், கீர்த்தி, வாணாள், அஃதன்றி மனத்தெளிவால் முத்தியுமுண்டாகும் அஃதன்றி அத்வைத சாஸ்திர படனத்தோ டவ்வனுட்டானஞ் செய்பவர்க்குப்பலன் பிரத்தியட்சமென்றும், பலன் மிகுதியென்றும், மகத்தான ஆசைமுதலிய அனர்த்தம் நீங்குமென்றும், பிரயாசங்கொஞ்சமாய் யாதோர் வருத்தமின்றி யடையலாமென்றும், அளவில் செனமங்களா லியற்றுங் கருமங்களால் முத்தி அடைதற் கருமை என்றுஞ் சொல்லியதற்குப் பிரமாண முண்டோவெனின்? உண்டு.

அஃது யாதெனில்? கூறுகின்றோம்.

சிரவணபடன பலனுக்குப் பிரமாணம்.

தந்திரியி லெழுமிசைபோற் சாந்திமுன்ஞெ் சற்குணத்
தின்ஞான மெழுந்தம் மிற்ருமா, மிந்தவிரண்டுங் குளமுமல
ரும்போலவினிது வளர்ந்திடு மொக்க விரண்டுங் கற்கில்,
வந்தனுகுர்தனித்தனியே யிரண்டுங்கற்கில் வருபயஞென்றில
தாமிவ் வாய்மைகேள்வி, மூந்துமறம் பொருளின்பங் கீர்த்தி
வாஞெண் முழுதளிக்கு மனத்தெளிவான் முத்திநல்கும்.

என்று ஸ்ரீ-வசிஷ்டமகாமுனீச்சுரரால் திருவாய்மலர்ந்தருளிய ஞானவாசிட்டத்திலும்,

பலன் பிரத்தியட்ச மென்றதற்குப் பிரமாணம்.

மந்திரஜெப முதலானவைகட்குத் திருஷ்டபல மல்லாத படியினுல் நியமமும் நியமந்தப்பிஞற் பிரத்தியபாய முண்டு. அசனம் பண்ணுகிறது பசியைப் போக்குகிறுற்போலத் தத்து வபாவனையும் விபரீதபாவனையைப் போக்குகிறது திருஷ்ட பலமானபடியினுல் நியமந்தேவையில்லையென்று ஸ்ரீ-வித்தியா ரண்ணியசுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளிய பஞ்சதசப் பிரகரணத்திலும்.

பலன் மிகுதியென்றதற்குப் பிரமாணம்.

இசழாத்து மதத்துவத்தி னுயர்தியான முபகாரங்களொ டு, நிகழ்பூசனையா மிவ்வழியா லன்றிப் பிறிதோர் நெறிகளி ஞற், புகழ்மெய்யுணர்வு கிடையாது புரணதியான பூசையி ணை, யிகழ்மூடர்கள் செய்யினும் பதின்மூன் றிமைப்பிற்பசு வீய்ந்துளபேறும்.

அன்றியும்.

இயலார் கடவுளாந் தன்னை யிமைநூறளவு பூசிக்கி, லய மேதத்தி லாயிரமாம் பேருமனா நாழிகை பூசை, முயல்வாரி

லக்கமயமே தப்பயனைப் பெறுவர் முறைமையினால், பயனார் பூசையொரு கடிகைபண்ணி லிராசசூயபலம்.

அன்றியும்.

பாசமின்றி யுள்ளுணர்வைப் பதினைங்கடிகை பூசிக்கி
லிராசசூய விலக்கமிக ரிவ்வாறொருநாளருச்சிக்கி
லாசிலாதபரவொளியி லைமரலாகு மினாதானே
யேசில்பரம யோகமினா தானேபரம கிரியையுமே.

என்று ஸ்ரீ-வசிஷ்டமகாமுனீச்சுரரால் திருவாய்மலர்ந்தருளிய ஞானவாசிட்டத்திலும்.

உலகியல்பாங் கீதைக்கு முவந்தருளுமிறையென்று
விலகியவை நீக்கக்கீதைக் கென்செயானிறையதனு
னலமிகுத்த பொருள்வேண்டி னலமிகுபத்தியினோடும்
பலமிகுநற் கீதைகளே யெப்பொழுதும் பாடுவான்.

அன்றியும்.

அறையுமறையா லாகமத்தா லறியானாகின் மற்றுந்தா
னறிவதொருபாடையினாலே யறைவானென்று மமையாதே
பிறையையடைதற்கேது விதுவிதனாற் பரமயோகெய்தும்
பிறிவொன்றறவே சிவன்றன்னை யோகத்தாலே பெறலாமால்.

என்று ஸ்ரீ-பிரமதேவுராற் திருவாய்மலர்ந்தருளிய பிரமகீதையிலும்.

ஆசை முதலிய அனர்த்தங்கள் நீங்குமென்றதற்குப் பிரமாணம்.

ஆவதென்பது மாசையு மற்றன
மேவஞான வெந்நீயிடை வெந்தன

யாவர்தம்மொழி லவ்வகை யோர்களே
சாவதும் பிறப்புந் தவிர்ந் தார்கடாம்.

அன்றியும்.

யாவனொருவன் றன்னுடம்பை யானென்றிருக்கு மியல் பொழிந்தா, னியாவனொருவன்றன் காணமியாதொன் றேடும் விழைந்திரா, னவ்வவனிவ் வுலகத்தை யடையக் கொன்றானு மினுமோர், பாவமில்லையவன் கொன்றபழியுமில்லைபார்மன்னா.

என்று ஸ்ரீ-கிருஷ்ண பகவானாற் றிருவாய்மலர்ந்தருளிய பகவற்கீதையினும்.

புரங்கண்மூன்றிலும் போக்கிய மியாவையு
மிருந்து துய்ப்பவ னியாவன் மற்றியாவையும்
பரம்பிரம மெனும்படி பார்ப்பவ
னரந்தையெய்திடா னாயிரஞ்செய்யினும்.

அன்றியும்.

விழுமிதாமய மேதங்கள் செய்யினும்
பழிமிகும் பஞ்சபாதகம் பண்ணினு
மொழிவுறும லொன்றே யென்றுணருவா
னழிவினணந்த நன்மையுந் தின்மையும்.

அன்றியும்.

மத்தமூறும் பிறவிப் பகை மாளு
முத்தியு முன்னிலை யாமுடி வில்லா
வெத்துய ருங்கெடு மின்பம தாகு
மத்து விதத்தை யறிந்தவ ருக்கே.

அன்றியும்.

அத்துவிதர்ந்தானு மவிகற்பத்தை யடைந்த போதே
புத்தியிலிளைப்பும் போகும் போகுமிப்பிறப்பு நேரா
வெத்திகழ்வாலும் பேதமின்மையா லிறையே யெண்ணுந்
தத்துவவித்தே யென்றன் றலையினல் வணங்கத் தக்கான்.

என்று ஸ்ரீ-பிரம தேவராற் றிருவாய்மலர்ந்தருளிய
பிரமகீதையிலும்.

நிருவிகற்ப வான்மாவிற் சகத்தோற்ற மொடுக்கமிவை நேராயில்லை, மருவிகற்ப பேதமுறுப் பராபரமா மப்பொருளை வயங்கக்கண்டாற், பெருமனக் கட்டறுமைய மறுங்கருமம மறுமென்முன் பெரியோன்வள்ள, லொருகடுகிற் பொன்மேரு புகிலன்றோ பிரமாண்ட மொடுங்குமென்முன்.

என்று ஸ்ரீ-வசிஷ்டமகாமுனீச்சுரராற் றிருவாய்மலர்ந்தருளிய
ஞானவாசிட்டத்திலும்.

யாதோர் வருத்தமின்றி யடையலா மென்றதற்குப்
பிரமாணம்.

ஆதலாலறியு மறிவெலாங்கைவிட் டறிவினுக் கறிவதாய் நின்ற, பேதமில்பிரம மொன்றுமேயறிவான் பேறுபேரின்பமாம் பிறத்தல், சாதலற்றிருக்கு மதனையோர்வருத்த மின்றியே சாரலாயிருக்க, வாதரித்தறியா ரற்பமேவிரும்பி யனந்ததுக்கத்திலே யமைவார்.

என்று ஸ்ரீ-பிரம தேவராற் றிருவாய்மலர்ந்தருளிய
பிரமகீதையிலும்.

## கருமங்களால் முத்தியடைதற்கு அருமை யென்றதற்குப் பிரமாணம்.

அன்றியுனைக்கரு மனந்தகோடி பிறப்பிடைக் கருமமாற்றினுலுந், துன்றரிதுபரகதியைச் சைமினிசொல் வேதாந்தச் சொற்கடேர்ந்து, நன்றிதரு பொருட்டெளிவாஞ் சிவஞானஞ் சிவனருளா னண்ணின் முத்தி, யொன்றலெளி தாதலினுன் மூதுணர்வா லிதற்கேற்ற வுறுதியோர்வாய்.

என்று சிதம்பர புராணத்திலும்.

இவ்வாறின் நூல்களில் கூறி யிருக்கின்றதுவே பிரமாணமாம் மென்றுணர்க.

முன்னற்கூறிய கிருச்சிர பலவிபரம் யாதெனில் மேற்கண்ட அருத்த சாஸ்திரத்தில் அருத்தத்தை ஈட்டும்படி பிரதிபாதித்த பிரகாரம் ஈட்டிய திரவியத்தைக் கையிற்கொண்டு தலைக்கன்றுபோடுஞ் சமயமுள்ள கபிலை நிறமுடைய காராம்பசுவை மனபூர்வகமாக வாங்கி அதற்கு மேற்கண்ட திரவியத்தை சுவர்ணமாக மாற்றி அதைகொண்டு ஆபரண விசேஷங்கள் செய்து அப்பசுவிற்குப் பாதகேசபரியந்தம் அவ்வாபரணத்தை அலங்கரித்து உத்தமமான அர்த்தோதயம் மகோதயம் முதலிய மகாபுண்ணிய காலங்களில் நல்ல வைதிகப் பிராமணர் அல்லது புண்ணிய புருடாள் அல்லது சீவன்முத்தர்கள் ஆகிய இப்படிப்பட்ட புருடாளுக்கு அப்பசுவை அதற்குரிய சரீர ஆயுளைச் சோதிடசாஸ்திர மறிந்தோர்களைக் கொண்டு பின்னிட்டு இவ்வளவு காலத்துக்கிருக்குமென்று தெரிந்துகொண்டு அவ்வளவு காலத்துக்கும் அப்பசுவின் சரீரம்

ஜீவித்தற்கு ஏதுவான பருத்திவிதை சவிடு புல்முதலிய வுண வுக்கு வேண்டிய திரவியம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு திரவியத்தையும் அப்பசுவையும் அவர்களிடத்திற் கோதான மாகக் கொடுத்தால் இஃதை ஒரு கிருச்சப்பலமென்று பெரி யோர்கள் சொல்லியிருக்கிறார்கள் இம்முறையன்றியி லின்னும் அநேகவித மாகவும் கதைகளுண்டு இஃது போல மேலே கா ட்டப்பட்ட ஸ்ரீ-விஸ்வாமித்திர முனீச்சுரர் ஸ்ரீ-வசிஷ்டம கா முனீச்சுரர் ஆகியஇவர்கள் விருத்தாந்தங்களும் ஒவ்வொ ருவர்அநேகவிதமாகச் சொல்லுவார்கள் ஆகையாலிச் சரித்திர ங்கள் நானுவாக வழங்கினும் அச்சரித்திர சாரத்தை மாத்தி ரம் மதிமான்கள் பொருளாயங்கீகரித்துக் கொள்ளுவார்கள்.

இவ் அத்தொய்த சாஸ்திர மான்மிய சங்கிரகம் யாவர்க் கும் எளிதாகத் தெரியும்படிக்கு ஆன்றோர்களாலும் அரிய திரு மூர்த்திகளாலும் திருவாய்மலர்ந்தருளிய நூல்களி லுள்ள தைச் சங்கிரகமாகத் திரட்டி அச்சிடப்பட்டன ஆகையால் இதன்கண் சொற்சோர்வு பொருட்சோர்வு வாக்கிற்சோர்வு இருக்குமாயின் இவ் அத்தொய்த சாஸ்திர மான்மியசங்கிரக த்தை ஆராய்ந்துபார்க்கும் அரிய குணங்களை அலங்கிருதமாகி கவேயே சொல்லையாகவுடைய சாதுக்கள் மன்னிக்க வேண் டியது.

அத்தொய்த சாஸ்திர மான்மிய சங்கிரகம்
முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

# பரிசோதனை பத்திரம்.

## அத்வைத சாஸ்திர மான்மிய சங்கிரகம்.

| பக்கம். | | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௩ | | ௰௭ | சங்கதிரய | சங்கத்திரய |
| ௫ | | ௪ | அனைத்தனை | லனைத்தின் |
| ஷை | | ௫ | மதற்கிதஞ் | மகற்கிதஞ் |
| ௯ | | ௮ | ஏயவிவோம் | ஏயவிருவோம் |
| ௮ | | ௯ | றிலலை | றில்லை |
| ௩ | | ௯ | மிந்நூலாற் | மிந்நூலாற் |
| ஷை | | ௭ | ராங்கியேய்து | ராந்தியெய்து |
| ௰௨ | | ௰௯ | சேன்ற | சென்ற |
| ௰௪ | | ௰௪ | சய்யிற் | கையிற் |
| ௰௫ | | ௰௧ | வயற்று | வயிற்று |
| ௰௯ | | ௧ | வது | பது |
| ஷை | | ௭ | படணஞ் | படனஞ் |
| ஷை | | ௨௯ | இடையூர்கள் | இடையூறுகள் |
| ௰௭ | | ௮௪ | இருவது | இருபது |
| ௰௮ | | ௨௨ | கரிமை | கருமை |
| ௨௰ | | ௰௭ | தேதராற் | தேவராற் |
| ௨௧ | | ௫ | விழைந்திரா | விழைந்திரா |
| ௨௩ | | ௧ | அரிமை | அருமை |
| ஷை | | ௰௯ | அதகைக் | அதைக் |
| ௨௪ | | ௰௩ | படிக்கி | படிக்கு |
| ஷை | | ௰௯ | வாக்கியசோ | வாக்கியச்சோ |